# கண் ஒளி

விழி 42 | பார்வை 3 | மார்ச் 2026

விலை ரூ.5/-




அரவிந்த் கண் மருத்துவமனை வெளியீடு

AUROLAB
SEE NEW POSSIBILITIES

## நான் பார்க்கும் அனைத்தும் தற்போது தெளிவாகத் தெரிகின்றன.

Every detail of my vision is truly incredible.



# Goodbye Spectacles

(High spectacle independence)

**கண்புரை அறுவைசிகிச்சையின்போது விஷேச லென்ஸ் பொருத்துவதன் மூலம் கண்ணாடியின்றி, துல்லியமான பார்வையை நீங்களும் பெற வேண்டுமா?**

அரவிந்த் கண் மருத்துவமனை ஆலோசகரை அணுகுங்கள் . . .

# கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர். ஜி. நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்


## உள்ளே...


குறை பார்வை உள்ளவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி 4

எரிச்சலின் பின்னாலிருந்த காரணம் 7

கண் இமை தோலில் புற்றுநோய் 8

விழித்திரை பிரிதல் 10

அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் 12


| அரவிந்த் கண் மருத்துவமனைகள் - தொலைபேசி எண்கள் | |
|---|---|
| மதுரை - (0452) 4356105 | தேனி - (04546) 252658 |
| திருநெல்வேலி - (0462) 4356100 | திருப்பூர் - (0421) 2266100 |
| கோயம்புத்தூர் - 0422) 4360400 | திண்டுக்கல் - (0451) 2448100 |
| பாண்டிச்சேரி - (0413) 2619200 | தூத்துக்குடி - (0461) 2300410 |
| சேலம் - (0427) 2356100 | உடுமலைப்பேட்டை - (04252) 260400 |
| சென்னை - (044) 40956101 | கோயம்புத்தூர் சிட்டி சென்டர் - (0422) 2540400 |
| திருப்பதி - (0877) 2502100 | கோவில்பட்டி - (04632) 290800 |
| தஞ்சாவூர் - (04362) 312121 | செங்கல்பட்டு - 044 (27426138) |

# குறை பார்வை உள்ளவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி




மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் குறை பார்வை துறை, **“குறை பார்வை உள்ளவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி“** ஒன்றை பிப்ரவரி 14 அன்று ஏற்பாடு செய்திருந்தது. காலை 10.00 மணி முதல் நடைபெற்ற இந்த நிகழ்வில், குறை பார்வை உள்ள நோயாளிகள், அவர்களின் குடும்பத்தினர், சமூகப் பணியாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 350-க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு, மருத்துவ சிகிச்சையைத் தாண்டி சுதந்திரம், தன்னம்பிக்கை மற்றும் சமூக ஆதரவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. ஊக்கமளிக்கும் உரைகள், திறன் மேம்பாட்டு அமர்வுகள், புதுமையான உதவி சாதனங்கள் வழங்குதல் போன்ற பல அம்சங்கள் இதில் இடம்பெற்றன.

**மதுரை அரவிந்தின்** தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கிம் வரவேற்புரை வழங்கினார். குழந்தைகள் கண்நலன் மற்றும் குறை பார்வைத்துறை தலைவர் டாக்டர் விஜயலட்சுமி, குறை பார்வையால் உருவாகும் சவால்களை எடுத்துரைத்து நிகழ்வின் நோக்கத்தை விளக்கினார்.

முதன்மை விருந்தினராக, மாண்புமிகு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில் குமார், ஐஏஎஸ், சென்னையிலிருந்து காணொளி வாயிலாக உரையாற்றினார்.

கௌரவ விருந்தினர்களாக மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி இயக்குனர் ஆர். ராஜா கோவிந்தசாமி மற்றும் விஷன் எய்ட்ஸ் இந்தியா நிர்வாக இயக்குநர் வி.எல். நரசிம்மன் கலந்து கொண்டு, குறை பார்வை உள்ளவர்களுக்கான உதவி சாதனங்களின் அவசியத்தை வலியுறுத்தினர்.

அரவிந்தின் கௌரவ இயக்குநர் டாக்டர் ஜி. நாச்சியார் அவர்கள் உற்சாகமூட்டும் உரை வழங்கினார். தொடர்ந்து, குறை பார்வை உள்ளவர்களுக்கு, விழாவின் சிறப்பு விருந்தினர்கள் ஸ்மார்ட் விஷன் கண்ணாடிகளை வழங்கினர்.

**இந்த நிகழ்வு குறித்து மருத்துவர் சாகித்யா கூறியது:**

இந்த நிகழ்வில் சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். அதில் 90 குறை பார்வை மாணவர்கள், 150 கல்லூரி மாணவர்கள், பல்வேறு தொழில்முறை நிபுணர்கள் அடக்கம். மற்றும் 13 உதவி அமைப்புகள் பங்கேற்றன.

மறுவாழ்வு மற்றும் தொழில் கல்வி வழிகாட்டுதலை வழங்குவதே நிகழ்வின் முக்கிய நோக்கமாக இருந்தது. கலந்து கொண்ட மாணவர்களுக்கும் ஸ்டால் அமைத்த NGO களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

**டாக்டர் விஜயலட்சுமி ஆற்றிய உரையின் முக்கிய கருத்துகள்**



“குறை பார்வை உள்ள மாணவர்கள் தொழில்நுட்ப உதவிகளின் மூலம் பள்ளிகளில் தன்னம்பிக்கையுடன் கல்வியைத் தொடர முடியும். ஆனால் முழுமையாக பார்வை இழந்த குழந்தைகளுக்கு இன்னும் பல சவால்கள் உள்ளன. பல நேரங்களில், சிறப்பு பள்ளிகள் (*Special Schools*) தொலைவில் இருப்பதால் பெற்றோர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். மொபைல் போன், கணினி, ஸ்மார்ட் விஷன் கண்ணாடிகள் ஆகியவற்றை சரியாக பயன்படுத்த தெரிந்தால், அது குழந்தைகளின் கல்வி கனவுகளை நனவாக்கும்.

பெற்றோரின் விழிப்புணர்வு குறைபாடே பல வாய்ப்புகள் தவறுவதற்கான முக்கிய காரணம் என்றும் குறிப்பிட்ட அவர், இந்நிகழ்வு கண் மருத்துவர்கள், சிறப்பு ஆசிரியர்கள், அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து வழிகாட்டும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

5 முதல் 20 வயதினரை முன்னுரிமையாகத் தேர்வு செய்ததன் காரணமாக, வளர்ந்து வரும் வயதிலேயே அவர்களின் வாழ்க்கையை

மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணமே என்று அவர் விளக்கினார். கணினி சாதனம் வழங்கப்பட்ட ஒரு சிறுவனின் மகிழ்ச்சி இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அவர் பகிர்ந்தார்.

பங்கேற்றவர்கள் இந்த நிகழ்வு தங்கள் வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக மகிழ்ச்சியுடன் கருத்து தெரிவித்தனர். எதிர்பார்த்ததை விட அதிக தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது என்றும், இதுபோன்ற நிகழ்வுகளை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் அவர்கள் பாராட்டினர்.

இந்த நிகழ்வு, மருத்துவ சிகிச்சையைத் தாண்டி முழுமையான பராமரிப்பு வழங்கும் அரவிந்த் கண் மருத்துவமனையின் உறுதியை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியது. தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் சமூக வலைப்பின்னல்கள் மூலம் குறை பார்வை உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியாக இது குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

குறைபார்வை ஆலோசனை மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை

KGS Advanced MR & CT Scan
One stop shop in CT, MR & USG / Doppler Imaging
ASIA'S FIRST
3 TESLA MAGNETOM Spectra
SIEMENS
THE MOST ADVANCED MR IMAGING SYSTEM
CT Somatom AS Definition - Plus - XI Model
With (426 Slices /Sec For Cardiac CT)
COMPACT | EFFICIENT |
UNCOMPROMISED PERFORMANCE
Most Accurate & Fastest
H.O.: 766, Annanagar, (Opp. Cini Priya Theatre) Madurai - 625020. Ph: (0452) 2524321, 2528929.
53-1/135, Annanagar, 1st East Cross Stret, Madurai - 625020. Ph: 98431 10069, 98431 65192.
B.O.: GH Road, Near Rupe Lodge, Ilangovadigal Street, Ramanathapuram - 623501. Ph: (04567) 228827.
B.O. : 346, Thiruchuli Road, Arupukottai - 626 101. Ph: (04566) 222022, 222265.
www.kgsscans.com



## எரிச்சலின் பின்னாலிருந்த காரணம்

லட்சுமிக்கு அலுவலகத்தில் நீண்ட நேரம் கணினியில் தான் வேலை இருக்கும். சில நாட்களாக அவருக்கு கண்களில் எரிச்சலும் சிவப்பும் இருந்தது. காலை எழுந்ததும் கண் இமைகள் ஒட்டிக் கொள்வதும், சில நேரம் கண்களில் அதிகமாக நீர் வருவதும் அவரை கவலைப்படுத்தியது. "இது சாதாரண சோர்வு தான்," என்று முதலில் நினைத்தார். ஆனால் ஒரு நாள் வேலை செய்யும்போது கண்களில் வலி அதிகரித்ததால், அவர் கண் மருத்துவரை அணுகினாள்.

மருத்துவர் பரிசோதித்து, "உங்களுக்கு உலர் கண் (Dry Eye) பிரச்சனை உள்ளது. கண்களில் போதுமான கண்ணீர் இல்லாததால் இந்த எரிச்சல் வருகிறது," என்று கூறினார். மருத்துவர் செயற்கை கண்ணீர் சொட்டு மருந்தை பரிந்துரைத்தார். மேலும், நீண்ட நேரம் திரை முன் வேலை செய்யும் போது இடைவெளி எடுக்கவும், காற்று மற்றும் வெயிலில் கண்களை பாதுகாக்கவும் அறிவுறுத்தினார்.

சில வாரங்களில் லட்சுமியின் கண் எரிச்சல் குறைந்து, அவர் நிம்மதியாக வேலை செய்யத் தொடங்கினார். அதன் பிறகு அவர் அனைவருக்கும் ஒரு முக்கியமான செய்தியை கூறி வருகிறார்:

- கண்களில் வறட்சி, சிவப்பு, எரிச்சல் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள்.
- அதிகமாக நீர் வருவதும் கூட உலர் கண்ணின் அறிகுறியாக இருக்கலாம். உடனே கண் மருத்துவரை அணுகுங்கள்.


**நினைவில் கொள்ளுங்கள்:** உலர் கண் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை எடுத்தால் கண்களை ஆரோக்கியமாக பாதுகாக்கலாம்.

அபிநயா, கருவிழிப் பிரிவு, அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை

### உலர் கண்

கண்களுக்கு போதுமான கண்ணீர் இல்லாதபோது, வழக்கத்திற்கு மாறாக கண்ணீர் அதிகமாக ஆவியடைந்தால் கண் எரிச்சலடையும் நிலை உண்டாகும். இதற்கு உலர் கண் (Dry Eye) என்று பெயர். கண்கள் வறண்ட நிலையிலும் சிவப்பு நிறத்திலும் இருக்கும். சிகிச்சை எடுப்பது அவசியம்.

# கண் இமை தோலில் புற்றுநோய்



மதுரை அருகிலுள்ள கிராமத்தில் வசித்த 62 வயதான ராமசாமி, கடந்த சில மாதங்களாக கீழ் கண் இமையில் ஒரு சிறிய கட்டி இருப்பதை கவனித்தார். வலி இல்லாததால் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. “சிறிய மச்சம் தான்” என்று நினைத்து தினசரி வேலைகளைத் தொடர்ந்தார்.

காலம் சென்றபோது அந்த கட்டி மெதுவாக பெரிதாகி, சில சமயம் இரத்தம் வடிவதையும் அவர் கவனித்தார். மேலும், அந்த பகுதியில் இருந்த இமை முடி உதிரத் தொடங்கியது. குடும்பத்தினர் வற்புறுத்தியதால், அவர் இறுதியில் கண் மருத்துவரைச் சந்தித்தார்.

மருத்துவர் பரிசோதனை செய்து, இது கண் இமை தோலில் ஏற்படும் புற்றுநோயாக இருக்கலாம் என்று சந்தேகித்தார். உடனே கட்டியை வெட்டி அகற்றி பரிசோதனைக்கு அனுப்பினார். ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்ததால், ராமசாமிக்கு தேவையான அறுவை சிகிச்சையும் மறுசீரமைப்பும் வெற்றிகரமாக செய்யப்பட்டது. சில வாரங்களில் அவர் வழக்கமான வாழ்க்கைக்கு திரும்பினார்.

**இப்போது ராமசாமி அனைவரிடமும் ஒரு விஷயத்தைச் சொல்லுகிறார்,** “கண் இமையில் வரும் சிறிய மாற்றங்களையும் அலட்சியம் செய்யாதீர்கள். ஆரம்பத்திலேயே மருத்துவரை பார்த்தால் புற்றுநோயையும் குணப்படுத்த முடியும்.”

### அறிமுகம்

தோல் புற்றுநோயில் ஒருவகை, கண் இமை தோலில் ஏற்படும். பொதுவாக, கீழ் இமையில் இது ஏற்படும். எனினும், மேல் இமை, கண்களில் ஓரங்கள், புருவங்கள் போன்றவற்றிலும் ஏற்படும்.

### அபாயக் காரணிகள்:

வயது மூப்பு, வெளிர் தோல் மற்றும் சூரிய ஒளியில்
அதிக நேரம் இருத்தல்/பணிபுரிதல்

### அறிகுறிகள்:

தோலில் வலியில்லாத கட்டிகள் உண்டாகுதல், வலி ஏற்படுத்தும் கட்டிகள், தோலில் ஏற்படுதல், இமைகளில் உள்ள முடி உதிர்தல், தோலில் புண் மற்றும் மச்சங்கள் ஏற்படுதல், தோலில் இரத்தம் வடிதல், தோல் இறுக்கமடைதல்

உங்களுக்கு மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால், கண் மருத்துவரை உடனடியாகப் பார்க்கவும். கண் இமைகளில் புற்றுநோய் தாக்கியிருந்தால் உடலில் மற்ற பாகங்களுக்கும் பரவும். ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால் கட்டியை அகற்றி, கண் இமை புற்றுநோயை குணப்படுத்தலாம். சிகிச்சையைத் தாமதப்படுத்தினால் கண் இமை புற்றுநோய் உடலெங்கும் பரவ வாய்ப்புண்டு.

### சிகிச்சை

தோல் புற்றுநோய்க்கான சிகிச்சை, இரண்டு படிநிலைகளை உடையது. வெட்டியெடுத்தல் மற்றும் மறுசீரமைப்பு.

### வெட்டியெடுத்தல்

கட்டிகளை மருத்துவர் வெட்டி, அகற்றுவார். கண்இமை தோல் புற்றுநோயில் முழு கண் இமையும் அகற்றப்படும். கட்டிகள், பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு புற்றுநோய் கட்டியா என்பது உறுதி செய்யப்படும். நோயின் தீவிரத்தைப் பொறுத்து உங்களுக்கு தேவைப்படும் சிகிச்சையை கண் மருத்துவர் பரிந்துரைப்பார்.


### மறுசீரமைப்பு

அகற்றப்பட்ட திசுக்களை மருத்துவர் மீண்டும் உருவாக்குவார். உங்கள் உடலில் உள்ள தோலிலிருந்து ஒரு பகுதி எடுத்து கண் இமைத் தோலை உருவாக்குவார். இயல்பான கண் இமை போலவே இதுவும் செயல்படத் தொடங்கும். இது கண்களையும் பார்வையையும் பாதுகாக்கும், முகத்திற்கு இயல்பான தோற்றத்தையும் அளிக்கும்.

அறுவை சிகிச்சைக்கு பிறகு சிறிய தழும்பு இருக்கும். புற்றுநோய் மீண்டும் தாக்காமல் இருப்பதை உறுதி செய்ய, முறையான பரிசோதனை அவசியம். கண் இமையைத் தாண்டி உடலில் புற்றுநோய் பரவியிருந்தால் புற்றுநோய்க்கான பிற சிகிச்சைகளை தவறாமல் தொடர வேண்டும்.

சித்ரா, வெளிநோயாளிகள் பிரிவு, அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை

# விழித்திரை பிரிதல்




கண்களில் உள்ள ஒளி உணர்திறன் திசுவிற்கு விழித்திரை எனப்படுகிறது. இது, நாம் பார்க்கும் விஷயங்களை பார்வை நரம்புகள் மூலம் மூளைக்கு அனுப்புகிறது. விழித்திரையில் பாதிப்பு ஏற்படும்போது, விழித்திரை பிரிதல் ஏற்படலாம். முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் நிரந்தர பார்வையிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

## சிகிச்சை

விழித்திரை அறுவை சிகிச்சை செய்வதே (scleral buckle ) அல்லது (vitrectomy) விழித்திரைப் பிரிதலுக்கான தீர்வு. Scleral buckle எனும் அறுவை சிகிச்சையில் கரு வளையத்திற்கு வெளியே சிறிய சிந்தெடிக் பேன்ட் (synthetic band) வைக்கப்படும். பிரிந்த விழித்திரையை ஓரளவு தள்ள இது பயன்படும்.

Vitrectomy எனும் மற்றொரு அறுவை சிகிச்சையில் சிலிக்கான் எண்ணெய் அல்லது கேஸ் கொண்டு கண் திரவம் (vitreous) மாற்றப்படும். நோயின் தீவிரத்தைப் பொறுத்து எந்த அறுவை சிகிச்சை என மருத்துவர் முடிவு செய்வார்.

விழித்திரை பிரிதல் உள்ள நோயாளிகளில் 90% வரை நவீன தெரபி மூலம் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டாலும், சில நேரங்களில் மறுசிகிச்சை தேவைப்படலாம். இருப்பினும், பார்வையில் முன்னேற்றம் இருக்குமா என்பதைக் கணிக்க முடியாது. பாதிப்பு தீவிரமடையும்முன் சிகிச்சை எடுத்துக்கொண்டால் பார்வையில் முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது

## நிழலின் எச்சரிக்கை

முரளி ஒரு பள்ளி ஆசிரியர். ஒரு நாள் மாலை பாடங்கள் முடித்து வீட்டிற்கு வந்தபோது, அவர் பார்வையில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. கண் முன்னே சிறிய கருப்பு புள்ளிகள் மிதப்பது போலவும், சில நேரங்களில் மின்னல் போல ஒளி பளிச்சென தோன்றுவது போலவும் இருந்தது. “சோர்வு தான் இருக்கும்,” என்று முதலில் அவ்வளவாக கவனிக்கவில்லை. ஆனால் மறுநாள், இடது கண்ணில் மங்கலான பார்வை மற்றும் ஒரு கருப்பு நிழல் பரவுவது போல தெரிந்தது. உடனே அவரது மனைவி, “இது சாதாரணம் இல்லை. உடனே கண் மருத்துவரை பார்க்கலாம்,” என்றாள்.

மருத்துவரை அணுகிய முரளிக்கு **விழித்திரை பிரிதல்** ஆரம்ப நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவர் உடனடியாக சிகிச்சை அளித்தார். சில வாரங்களில் முரளியின் பார்வை நிலைமை கட்டுக்குள் வந்தது.

மருத்துவர் கூறினார், “நீங்கள் சரியான நேரத்தில் வந்தது மிகப் பெரிய அதிர்ஷ்டம். தாமதித்திருந்தால் நிரந்தர பார்வையிழப்பு ஏற்பட்டிருக்கும்.” அந்த நாளிலிருந்து முரளி அனைவரிடமும் ஒரு செய்தியை பகிர்ந்து வருகிறார்:

– பார்வையில் திடீர் மாற்றம் ஏற்பட்டால் அலட்சியம் செய்யாதீர்கள். கருப்பு புள்ளிகள், மின்னல் போல ஒளி, மங்கலான பார்வை — உடனடி எச்சரிக்கை! உடனே கண் மருத்துவரை அணுகுங்கள்.

விழித்திரைப் பிரிவு, அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை

## கண் ஒளி இதழுக்குச் சந்தா செலுத்த...

**1 வருடச் சந்தா: ரூ.60/–**

கண் ஒளி இதழுக்குச் சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, ‘கண் ஒளி சந்தாவுக்கு’ என எழுதவும்.

**முகவரி:** காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை, 1, அண்ணா நகர், மதுரை – **625020**. தொலைபேசி: **9677702268**
மின்னஞ்சல் : kannoli@aravind.org

| அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் | | |
|---|---|---|
| தேதி | முகாம் நடைபெறும் இடம், ஊர் | மாவட்டம் |
| மதுரை-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள் | | |
| 1.3.26 | லயன்ஸ் கிளப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பொன்னமராவதி | புதுக்கோட்டை |
| 1.3.26 | சமுதாய கூடம், எரியோடு | திண்டுக்கல் |
| 1.3.26 | மாதா அமிர்தானந்த மயீ மடம், திருப்பரங்குன்றம் | மதுரை |
| 1.3.26 | கருப்பர் மஹால், திருவாடானை | ராமநாதபுரம் |
| 1.3.26 | சண்முகநாதபுரம் பி.எஸ்.எஸ் உயர்நிலைப்பள்ளி, ஆறாவயல் | சிவகங்கை |
| 1.3.26 | குருதயாள் சர்மா திருமண மண்டபம், தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 1.3.26 | லயன்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, லால்குடி | திருச்சி |
| 4.3.26 | கொழிஞ்சி அம்மன் கோவில் திருமண மண்டபம், மரமடக்கி | புதுக்கோட்டை |
| 7.3.26 | ஜே.எஸ்.கே. கல்யாணமஹால், சத்திரக்குடி | ராமநாதபுரம் |
| 7.3.26 | விவேகானந்தா பள்ளி சிவன் கோவில் அருகில், சிவகங்கை | சிவகங்கை |
| 7.3.26 | பஞ்சாயத்து யூனியன் பள்ளி, அரிமளம் | புதுக்கோட்டை |
| 7.3.26 | PUMS வித்யா பாடசாலை, பாபநாசம் | தஞ்சாவூர் |
| 7.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி , K.பரமத்தி | கரூர் |
| 8.3.26 | ஆர்.சி நடுநிலைப்பள்ளி, ஆரப்பாளையம் | மதுரை |
| 8.3.26 | ஸ்ரீ ஸ்ரீ ஞான வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, பொய்யுண்டார்கோட்டை | தஞ்சாவூர் |
| 8.3.26 | சாலியர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சத்திரப்பட்டி | விருதுநகர் |
| 8.3.26 | மேல்நிலைப் பள்ளி, ஆயக்குடி | திண்டுக்கல் |
| 8.3.26 | ஆயிர வைசியர் திருமண மண்டபம், பாண்டுகுடி | ராமநாதபுரம் |

| | | |
|---|---|---|
| 11.3.26 | ஸ்ரீ கண்ணாத்தாள் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, நாட்டரசன்கோட்டை | சிவகங்கை |
| 14.3.26 | தியாகராஜர் உதவி பெறும் நடுநிலைப்பள்ளி, சயனபுரம் | தஞ்சாவூர் |
| 15.3.26 | ராமகிருஷ்ண மடம், ஆத்திகுளம் | மதுரை |
| 15.3.26 | ஸ்ரீரங்கம் ஷீரடி சாய் அறக்கட்டளை, திருவளர்சோலை | திருச்சி |
| 15.3.26 | தாமரை சர்வதேச பள்ளி, தம்பிக்கோட்டை | தஞ்சாவூர் |
| 15.3.26 | திருமுருகன் திருமணமண்டபம் தென்மாபட்டு, திருப்பத்தூர் | சிவகங்கை |
| 21.3.26 | சர் சிவசாமி ஐயர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருக்காட்டுப்பள்ளி | தஞ்சாவூர் |
| 21.3.26 | ஜெயராணி மெட்ரிக் பள்ளி, கைக்குறிச்சி | புதுக்கோட்டை |
| 21.3.26 | மணி மெட்ரிகுலட்டின் பள்ளி, கபிஸ்தலம் | தஞ்சாவூர் |
| 21.3.26 | சமுதாய கூடம், திருப்புல்லாணி | ராமநாதபுரம் |
| 21.3.26 | இன்ப சேவா சங்கம் டிரைனிங் செல், கடவூர் | கரூர் |
| 22.3.26 | சமுதாய கூடம், அவனியாபுரம் | மதுரை |
| 22.3.26 | அரசு தொடக்கப்பள்ளி, பூதிபுரம் | திண்டுக்கல் |
| 22.3.26 | வித்யாமந்திரி மெட்ரிகுலேஷன் பள்ளி, பந்தல்குடி | விருதுநகர் |
| 22.3.26 | ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி கோவில், சிவகாசி | விருதுநகர் |
| 22.3.26 | ஓம் சக்தி கோவில், குட்டைகுளம், அறந்தாங்கி | புதுக்கோட்டை |
| 22.3.26 | பஞ்சாயத்து யூனியன் பள்ளி, வலசைப்பட்டி | சிவகங்கை |
| 22.3.26 | விநாயகா மஹால், பேராவூரணி | தஞ்சாவூர் |
| 28.3.26 | அரசு மேல்நிலைப்பள்ளி, தாயில்பட்டி | விருதுநகர் |
| 28.3.26 | TELC மெட்ரிகுலேஷன் பள்ளி,கறம்பக்குடி | புதுக்கோட்டை |
| 28.3.26 | அய்யனார் திருமண மண்டபம்,T.கல்லுப்பட்டி | மதுரை |
| 28.3.26 | ராமரத்தின திருமண மண்டபம், வளநாடு | திருச்சி |
| 29.3.26 | சமுதாய கூடம், ஐராவதநல்லூர் | மதுரை |
| 29.3.26 | சமுதாய கூடம், ஒத்தையால் | விருதுநகர் |

| | | |
|---|---|---|
| 29.3.26 | அரசு மேல்நிலைப்பள்ளி, கூளையான்விடுதி | புதுக்கோட்டை |
| 29.3.26 | SMSV மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி | சிவகங்கை |
| 29.3.26 | பழனியப்பா திருமண மண்டபம், ஒட்டன்சத்திரம் | திண்டுக்கல் |
| 29.3.26 | திருமகள் கல்யாணமஹால், தர்மசானபட்டி | மதுரை |
| 29.3.26 | ஸ்ரீ சரஸ்வதி பாடசாலை, கும்பகோணம் | தஞ்சாவூர் |
| **திருநெல்வேலி-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 1.3.26 | SMRV மேல்நிலைப் பள்ளி, வடசேரி | கன்னியாகுமரி |
| 1.3.26 | STC நடுநிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம் | திருநெல்வேலி |
| 4.3.26 | விவேகானந்தா கேந்திரா ஹால் | கன்னியாகுமரி |
| 7.3.26 | RC நடுநிலைப்பள்ளி, சிந்தாமணி | தென்காசி |
| 8.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஆலங்குளம் | தென்காசி |
| 14.3.26 | சேரன்காட்டு குஞ்சிக்குட்டன் பிரார்த்தனை நினைவு மண்டபம், சேர்த்தலா, கேரளா | ஆலப்புழா |
| 15.3.26 | P.S. சுப்புராஜா மஹால் டிரஸ்ட் ஹால் | தென்காசி |
| 22.3.26 | செயின்ட் பால்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவில்பட்டி | தூத்துக்குடி |
| 29.3.26 | அரசு யு.பி.பள்ளி, கல்லுவத்துக்கல், கேரளா | கொல்லம் |
| **தேனி-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 1.3.26 | சமுதாய கூடம், பட்டிவீரன்பட்டி | திண்டுக்கல் |
| 1.3.26 | புனித அலோசியஸ் தொடக்கப்பள்ளி, ராயப்பன்பட்டி | தேனி |
| 7.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மயிலாடும்பாறை | தேனி |
| 14.3.26 | AHM டிரஸ்ட் வளாகம், பி.தர்மத்துப்பட்டி | தேனி |
| 15.3.25 | SNDP ஆடிட்டோரியம், பாலகிராம் | இடுக்கி |
| 21.3.26 | ஆவுடையாச்சி கல்யாண மண்டபம், ஜக்கம்பட்டி | தேனி |
| 22.3.26 | ராஜகோபாலன் திருமண மண்டபம், கோட்டூர் | தேனி |

| | | |
|---|---|---|
| 28.3.26 | குலாலர் சமுதாய கூடம், கம்பம் | தேனி |
| 29.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, விருவீடு | திண்டுக்கல் |
| 29.3.26 | SNDP ஆடிட்டோரியம், பைசன்வேலி | இடுக்கி |
| கோயம்புத்தூர்-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள் | | |
| 1.3.26 | ஊட்டி பொதுப்பள்ளி, ஒன்னிபாளையம் | கோயம்புத்தூர் |
| 1.3.26 | ஜெயின் சங்கம், மேட்டுப்பாளையம் | கோயம்புத்தூர் |
| 1.3.26 | RR மஹால், கணுவாய் | கோயம்புத்தூர் |
| 1.3.26 | சின்ன வைர விழா தொடக்கப்பள்ளி, கோபிசெட்டிபாளையம் | ஈரோடு |
| 1.3.26 | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பல்லடம் | திருப்பூர் |
| 1.3.26 | சத்ய சாய் கோவில், ராம் நகர் | திருப்பூர் |
| 1.3.26 | ரோட்டரி ஹால், சாம்ராஜ் நகர் | சாம்ராஜ் நகர் |
| 1.3.26 | லயன்ஸ் பள்ளி, கொப்பம் | பாலக்காடு |
| 1.3.26 | லயன்ஸ் ஹால், சூரியபாறை | பாலக்காடு |
| 7.3.26 | மாடல் பப்ளிக் ஸ்கூல், குண்ட்லுப்பேட்டை | சாம்ராஜ் நகர் |
| 7.3.26 | ரோட்டரி ஹால், தர்மபுரி | தருமபுரி |
| 8.3.26 | விஸ்வச்சதானா பள்ளி, கொள்ளேகால் | சாம்ராஜ் நகர் |
| 8.3.26 | கார்ப்பரேஷன் நடுநிலைப்பள்ளி, வட்டமலைப்பாளையம் | கோயம்புத்தூர் |
| 8.3.26 | செங்குந்தர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி | ஈரோடு |
| 8.3.26 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெருந்துறை | ஈரோடு |
| 8.3.26 | PU நடுநிலைப்பள்ளி, திருமுருகன்பூண்டி | திருப்பூர் |
| 8.3.26 | கொங்கு மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, குன்னத்தூர் | திருப்பூர் |
| 14.3.26 | ரோட்டரி ஹால், தர்மபுரி | தருமபுரி |
| 14.3.26 | ரோட்டரி ஹால், சத்தியமங்கலம் | ஈரோடு |
| 14.3.26 | லயன்ஸ் ஹால், உடுமல்பேட்டை | திருப்பூர் |

| | | |
|---|---|---|
| 14.3.26 | ரோட்டரி பள்ளி, பன்னூர் | மைசூர் |
| 14.3.26 | அசம்ப்ஷன் பள்ளி, சுல்தான்பத்தேரி | வயநாடு |
| 15.3.26 | சேம்பர் ஆஃப் காமர்ஸ் கட்டிடம், பட்டிம்பி | பாலக்காடு |
| 15.3.26 | பாலாஜி மஹால், சுல்தான்பேட்டை | கோயம்புத்தூர் |
| 15.3.26 | அங்கையர் செல்வி கல்யாணமண்டபம், கண்ணம்பாளையம் | கோயம்புத்தூர் |
| 15.3.26 | விஜய் வித்யாயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லம்பள்ளி | தருமபுரி |
| 15.3.26 | SSV பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கொடுமுடி | ஈரோடு |
| 15.3.26 | ரோட்டரி ஹால், கூடலூர் | நீலகிரி |
| 15.3.26 | PU நடுநிலைப்பள்ளி, பெருந்தொழுவு | திருப்பூர் |
| 15.3.26 | லயன்ஸ் ஹால், திருப்பூர் | திருப்பூர் |
| 15.3.26 | AKVN மருத்துவமனை, தேவராயன்பாளையம் | திருப்பூர் |
| 20.3.26 | பார்வை மையம், கிணத்துக்கடவு | கோயம்புத்தூர் |
| 20.3.26 | லயன்ஸ் ஹால், பொள்ளாச்சி | கோயம்புத்தூர் |
| 20.3.26 | காமாட்சி அம்மன் கோவில் மண்டபம், கோவில்பாளையம் | கோயம்புத்தூர் |
| 21.3.26 | டவுன் டென்னிக் கிளப், நஞ்சன்கூடு | மைசூர் |
| 21.3.26 | லயன்ஸ் ஹால், தாராபுரம் | திருப்பூர் |
| 22.3.26 | விநாயகர் கோவில் மண்டபம், கரடிமடை | கோயம்புத்தூர் |
| 22.3.26 | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி, அந்தியூர் | ஈரோடு |
| 22.3.26 | பரத மாதா கோவில், பர்கூர் | கிருஷ்ணகிரி |
| 22.3.26 | PU நடுநிலைப்பள்ளி, அவிநாசி | திருப்பூர் |
| 22.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, காங்கேயம் | திருப்பூர் |
| 22.3.26 | JB நகர் ஸ்போர்ட்ஸ் கிளப் | மைசூர் |
| 28.3.26 | SRS கல்யாணமண்டபம், சூலூர் | கோயம்புத்தூர் |
| 28.3.26 | அசிஸ் மருத்துவமனை, தாளவாடி | ஈரோடு |
| 29.3.26 | சிஎஸ்ஐ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஓசூர் | கிருஷ்ணகிரி |

| | | |
|---|---|---|
| 29.3.26 | பப் பள்ளி, ஜின்னா சாலை, காவேரிப்பட்டினம் | கிருஷ்ணகிரி |
| 29.3.26 | CSI ஹோபார்ட் பள்ளி, ஊட்டி | நீலகிரி |
| 29.3.26 | PU ஆரம்ப பள்ளி, பாடியூர் | திருப்பூர் |
| 29.3.26 | வாசவி பள்ளி, ஹோலேநரசிபுரா | ஹாசன் |
| **பாண்டிச்சேரி-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 1.3.26 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருத்துறைப்பூண்டி | திருவாரூர் |
| 1.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, பாக்கம் எக்ஸ் ரோடு | விழுப்புரம் |
| 1.3.26 | ரா.நடேசனார் பள்ளி, ஆயக்காரன்புலம் | நாகை |
| 1.3.26 | எஸ்ஆர்ஜிடிஎஸ் தொடக்கப்பள்ளி, திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 1.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஜெயங்கொண்டம் | அரியலூர் |
| 7.3.26 | கணேசர் மண்டபம், செங்கம் | திருவண்ணாமலை |
| 7.3.26 | அரசு உயர். பள்ளி, நெமூர் | விழுப்புரம் |
| 8.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, விளமல் | திருவாரூர் |
| 8.3.26 | சிவ மகால், ஆண்டிக்குழி | கள்ளக்குறிச்சி |
| 8.3.26 | K.S.O பள்ளி, மங்கநல்லூர் | மயிலாடுதுறை |
| 8.3.26 | ஏவிகே திருமண மண்டபம், உடையார்பாளையம் | அரியலூர் |
| 14.3.26 | வாசவி மஹால், சேத்பேட்டை | திருவண்ணாமலை |
| 14.3.26 | சரஸ்வதி மஹால், எண்டியூர் | விழுப்புரம் |
| 15.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, திருக்கோயிலூர் | கள்ளக்குறிச்சி |
| 15.3.26 | எஸ்.எஸ். மருத்துவமனை, வேளாங்கண்ணி | நாகை |
| 15.3.26 | ஆர்சிஎம் பள்ளி, செய்யார் | திருவண்ணாமலை |
| 15.3.26 | எஸ்டிஎஸ் பள்ளி, சோழதரம் | கடலூர் |
| 21.3.26 | ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மணல்மேடு | மயிலாடுதுறை |
| 21.3.26 | பெருமாள் கோவில், கூட்டிப்பட்டு | விழுப்புரம் |

| | | |
|---|---|---|
| 22.3.26 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பேரளம் | திருவாரூர் |
| 22.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, யூ-கீரனூர் | கள்ளக்குறிச்சி |
| 22.3.26 | ஜெயின் மண்டபம், சீர்காழி | மயிலாடுதுறை |
| 22.3.26 | பாலம்மாள் திருமண மண்டபம், வந்தவாசி | திருவண்ணாமலை |
| 22.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, வேப்பூர் | கடலூர் |
| 28.3.26 | செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி, தானிப்பாடி | திருவண்ணாமலை |
| 28.3.26 | சர்மிளா அம்மன், பொறையார் | மயிலாடுதுறை |
| 29.3.26 | லயன்ஸ் ஹெல்த் சென்டர், மன்னார்குடி | திருவாரூர் |
| 29.3.26 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, சீதாப்பட்டினம் | கள்ளக்குறிச்சி |
| 29.3.26 | அரசு மேல்நிலைப் பள்ளி, சாந்தவாசல் | திருவண்ணாமலை |
| 29.3.26 | திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி, பண்ருட்டி | கடலூர் |
| **சென்னை-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 1.3.26 | பாணாவரம் ஸ்ரீ சரஸ்வதி தங்கமாளிகை, பாணாவரம் | ராணிப்பேட்டை |
| 1.3.26 | அமுதசுரபி டிரஸ்ட், இருளஞ்சேரி | திருவள்ளூர் |
| 1.3.26 | மணி தங்கமாளிகை, கலவாய் | ராணிப்பேட்டை |
| 1.3.26 | கீழ்கட்டளை லயன்ஸ் கிளப், மூவரசம்பேட்டை | சென்னை |
| 1.3.26 | ஜேசி இன்டர்நேஷனல் இந்தியாவுடன் இந்திய ரெட் கிராஸ் சங்கம், வாலாஜாபேட்டை | ராணிப்பேட்டை |
| 1.3.26 | செங்குந்த பேரவை, குன்றத்தூர் | காஞ்சிபுரம் |
| 8.3.26 | அரக்கோணம் ரோட்டரி கிளப், அரக்கோணம் | ராணிப்பேட்டை |
| 8.3.26 | புதிய குரோம்பேட்டை லயன்ஸ் கிளப், குரோம்பேட்டை | செங்கல்பட்டு |
| 8.3.26 | மென்மை டிரஸ்ட் ஜவாது ஹில்ஸ் ஸ்ரீ ஷீரடி சாய் ராம் டிரஸ்ட் மேலரசம்பட்டு, ஆலங்காயம் | திருப்பத்தூர் |

| | | |
|---|---|---|
| 8.3.26 | திரிஸ்தலம் வாராஹி ஸ்தேரம், பள்ளிகொண்டா | வேலூர் |
| 8.3.26 | லயன்ஸ் கிளப், பூரிவாக்கம் | திருவள்ளூர் |
| 8.3.26 | லயன்ஸ் கிளப் ஆஃப் காஞ்சிபுரம் டெம்பிள் சிட்டி | காஞ்சிபுரம் |
| 15.3.26 | கம்மவர் சேவை அறக்கட்டளை, குடியாத்தம் | வேலூர் |
| 15.3.26 | ஶ்ரீராமகிருஷ்ண மடம், நாட்றம்பள்ளி | திருப்பத்தூர் |
| 15.3.26 | லயன்ஸ் கிளப், கல்லிக்குப்பம் | திருவள்ளூர் |
| 15.3.26 | லயன்ஸ் கிளப், அரக்கோணம் | ராணிப்பேட்டை |
| 15.3.26 | தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் அறக்கட்டளை | காஞ்சிபுரம் |
| 22.3.26 | ஆம்பூர் ரோட்டரி கிளப், ஆம்பூர் | திருப்பத்தூர் |
| 22.3.26 | திருமலை மிஷன் அறக்கட்டளை | ராணிப்பேட்டை |
| 22.3.26 | எல்&டி, திருப்பாச்சூர் | திருவள்ளூர் |
| 22.3.26 | மார்டன் சென்னை ஆல்பா பள்ளி, வேளச்சேரி | சென்னை |
| 22.3.26 | ஆதீனம்  கணபிரகாசர் மடம், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 29.3.26 | லயன்ஸ் கிளப், ஊத்துக்கோட்டை | திருவள்ளூர் |
| 29.3.26 | இசல்மியா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிர்வாகம், வாணியம்பாடி | திருப்பத்தூர் |
| 29.3.26 | லயன்ஸ் கிளப், சிறுகாவேரிப்பாக்கம் | காஞ்சிபுரம் |
| **திருப்பதி-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 1.3.26 | ஜெயின் சமுதாய கூடம், ஶ்ரீ காளஹஸ்தி | திருப்பதி |
| 1.3.26 | ஶ்ரீ சத்ய சாய் கோவில், நாகலாபுரம் | திருப்பதி |
| 1.3.26 | Z.P. மேல்நிலைப்பள்ளி, நாயுடுபேட்டை | திருப்பதி |
| 3.3.26 | ஜெயின் சமுதாய கூடம், சூல்லூர்பேட்டை | திருப்பதி |
| 8.3.26 | Z.P. உயர்நிலைப் பள்ளி, மொகரால | திருப்பதி |
| 8.3.26 | Z.P. உயர்நிலைப் பள்ளி, பெத்தமல்லேலா | சித்தூர் |
| 8.3.26 | Z.P. உயர்நிலைப் பள்ளி, தகதர்த்தி/ பொடலகுரு | நெல்லூர் |
| 10.3.26 | அம்பேத்கர் பவன், புச்சிரெட்டிபாளையம் | நெல்லூர் |

| | | |
|---|---|---|
| 12.3.26 | Total Health Care, பங்காருபாலம் | சித்தூர் |
| 15.3.26 | Z.P. மேல்நிலைப்பள்ளி, புடிபர்த்தி | நெல்லூர் |
| 15.3.26 | Z.P. உயர்நிலைப் பள்ளி, கலுவோயி | திருப்பதி |
| 15.3.26 | Z.P. மேல்நிலைப்பள்ளி, மங் கலம்பேட்டை | சித்தூர் |
| 22.3.26 | Z.P. மேல்நிலைப்பள்ளி, பெத்தா உப்பரப்பள்ளி | சித்தூர் |
| 22.3.26 | எம்.பி.டி. அலுவலகம், வடமலாபெட்டா | திருப்பதி |
| 24.3.26 | உஷோதயா மைதானம், வெங்கடகிரி | திருப்பதி |
| 26.3.26 | டவுன் ஹால், குடுரு சித்தூர் | திருப்பதி |
| 29.3.26 | ஜெயின் சமுதாய கூடம், சித்தூர் | சித்தூர் |
| 29.3.26 | Z.P. மேல்நிலைப்பள்ளி, கந்துரு | சித்தூர் |
| **சேலம்-அரவிந்த் சார்பாக நடத்தப்படும் முகாம்கள்** | | |
| 4.1.26 | எடப்பாடி லயன்ஸ் கிளப், எடப்பாடி | சேலம் |
| 18.1.26 | சமுதாய கூடம், கோட்டை | சேலம் |
| 18.1.26 | எஸ்பிஎம்எம் மருத்துவமனை, அம்மாபேட்டை | சேலம் |
| 18.1.26 | சமுதாய கூடம், திருச்செங்கோடு | நாமக்கல் |
| 25.1.26 | திருமண மண்டபம், அரகளூர் | சேலம் |
| 25.1.26 | சமுதாய கூடம், பள்ளபட்டி | சேலம் |
| 25.1.26 | சமூகம் கூடம், மல்லிகுண்டம் | சேலம் |
| 25.1.26 | திருமண மண்டபம், சதபாடி | சேலம் |
| 25.1.26 | சுப்பிரமணியம் கல்லூரி, மோகனூர் | நாமக்கல் |
| 25.1.26 | பிருந்தாவன் மெட்ரிக் பள்ளி, காளப்பநாயக்கன்பட்டி | நாமக்கல் |

**2026 மார்ச் மாதத்தில் நடைபெற உள்ள அரவிந்த் கண் பரிசோதனை முகாம்கள் பற்றி அறிய:**

https://aravind.org/campdetails/

# டிஜிட்டல் திரைகளை அதிக நேரம் பார்ப்பதால் ஏற்படும் கண் எரிச்சலைத் தவிர்க்க...



டிஜிட்டல் திரையை
சுத்தமாக வைத்திருக்கவும்




அறையில்
போதிய வெளிச்சம்
இருக்க வேண்டும்



பொருத்தமான
கண்ணாடிகளை
அணியவும்





கண் கூசாத அளவிற்கு
டிஜிட்டல் திரையின்
பிரகாசத்தை வைக்கவும்



அவ்வபோது
கண்களை
சிமிட்டவும்



உங்களுக்கும் கணினிக்கும்
இடையே 40-50 செ.மீ
தூரம் இருக்க வேண்டும்





கணினி எழுத்துகளின்
அளவு தெளிவாகவும்
பெரியதாகவும்
இருக்க வேண்டும்

## கண்ஒளி இதழுக்கு ஆன்லைனில் சந்தா செலுத்தலாம்

**UPI | Netbanking | Mobile wallet**

உங்கள் முகவரியை ஆன்லைன் படிவத்தில் நிரப்பி, சந்தா தொகையை ஆன்லைனில் செலுத்தவும். ஆன்லைனில் பணம் செலுத்தியதும் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு ரசீது வரும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி/மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

Scan me



**1 வருட சந்தா: ரூ.60/-**

## கண்தானம் செய்த வள்ளல்கள்

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் அரவிந்த் ஒருங்கிணைந்த கண் வங்கிகள் மூலமாக கண்களைத் தானமாக அளித்தவர்களின் எண்ணிக்கை **295**

**கண்தானம் அளித்தவர்களின் குடும்பத்தினருக்கு அரவிந்த் கண் மருத்துவமனை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.**

### கண்தானம் செய்வதற்கு, தொடர்புகொள்ள...

**அரவிந்த் கண் வங்கிகள்**

மதுரை - 0452 - 4356105

திருநெல்வேலி - 0462 - 4356100

கோயம்புத்தூர் - 0422 - 4360400

பாண்டிச்சேரி - 0413 - 2619200

சென்னை - 044 - 40956100

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்**

திண்டுக்கல் - 0451 - 2448100

தேனி - 04546 - 252658

சேலம் - 0427 - 2356100

சின்னசேலம்,

பாண்டிச்சேரி - 9344126871

கோவில்பட்டி - 85258 22027

தூத்துக்குடி - (0461) 230 0410

**அரவிந்த் கண்தான மையம்**

கும்பகோணம் - 9842820007

# அரவிந்த் ஆப்டிகல்ஸ்

அரவிந்த் கண் மருத்துவமனைகள்







மதுரை | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | பாண்டிச்சேரி |
தஞ்சாவூர் | சேலம் | சென்னை | திருப்பதி | தேனி | திருப்பூர் |
திண்டுக்கல் | தூத்துக்குடி | உடுமலைப்பேட்டை | கோவில்பட்டி

# ‘கண்ஒளி’ WhatsApp Channel

கண்ஒளி இதழில் வெளியாகும் கட்டுரைகள், கண்ஒளி இதழை மின்னூல் வடிவில் படிப்பதற்கான Links, கண்நல விழிப்புணர்வு தகவல்கள், மாதந்தோறும் நடைபெறும் முகாம்கள் பற்றிய விவரங்கள் மற்றும் பல்வேறு பயனுள்ள தகவல்களை நேரடியாக, உங்கள் ஸ்மார்ட் ஃபோனில் பெற ‘கண்ஒளி’ WhatsApp சேனலை பின்தொடருங்கள்!



SCAN ME!

**RNI No : TNTAM /2000/912**

*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020.*
*Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.60/-*